பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
29 07 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தேர்வு முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் சட்டதிருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.
- ரயில் விபத்துகள் கடந்த 10 ஆண்டுகளில் 90 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- சென்னை மெட்ரோ ரயில் திட்ட பணிகள் குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் இன்று ஆய்வு மேற்கொண்டார்.
- தமிழகத்தில் சமூகநீதி கணக்கெடுப்பை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
- உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் ராகுல் சர்மா தங்கப்பதக்கத்தையும் Manish Narwal வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>>><<<<<

தேர்வு முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் சட்டதிருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

முன்னதாக இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய, மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கான தண்டனையை அதிகரிப்பதற்கான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றுள்தாக கூறினார்.

முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், 10 கோடி ரூபாய் வரை அபராதம் விதிப்பதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டால், அவர்களது சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கான கடுமையான பிரிவுகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

இதுதொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென மாநிலந்தோறும் விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்குகளின் விசாரணையை இரண்டு மாதங்களுக்குள் முடிப்பதை கட்டாயமாக்குவதற்கான அம்சங்களும் இம்மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

>>>>>>>><<<<<

ரயில் விபத்துகள் கடந்த 10 ஆண்டுகளில் 90 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இதுதொடர்பான புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்தார்.

பாதுகாப்பான ரயில் பயணத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

இதற்கான நிதி ஒதுக்கீடும் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு 39 ஆயிரத்து 200 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, தற்போது ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 389 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>>>><<<<<

சென்னை மெட்ரோ ரயில் திட்ட பணிகள் குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

நந்தனத்தில் உள்ள மெட்ரோ தலைமையகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து மெட்ரோ ரயிலிலும் முதலமைச்சர் பயணம் மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் சமூகநீதி கணக்கெடுப்பை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

இன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற அக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விவசாயிகளின் கூட்டுறவு பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, இந்தக் கூட்டத்தில் பாமக தலைவராக டாக்டர் அன்புமணி ராமதாசும், பொதுச்செயலாளராக திரு. வடிவேல் ராவணனும், பொருளாளராக திருமதி. திலகபாமாவும் மீண்டும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

>>>>>>><<<<<<

டாஸ்மாக் மதுபானக் கடைகளை தனியார் வசம் ஒப்படைக்கும் முடிவினை த.வெ.க. அரசு கைவிட வேண்டும் என்று அ ம மு க பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கென சட்டத்திருத்த மசோதாவை, சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடரில் கொண்டு வர த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகள், சட்டவிரோத மதுபான விற்பனையை அதிகரிக்க உதவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மதுபானக் கடைகளை படிப்படியாக மூடும் நடவடிக்கைகளை த.வெ.க. அரசு தொடர வேண்டும் என்றும் திரு. டி.டி.வி. தினகரன் கோரயுள்ளார்.

>>>>>>><<<<<<

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று முதன்மை அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் மகளிர் நீதிமன்றங்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. எஸ்.ஏ. தர்மாதிகாரி, நீதிபதி திரு. அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

பாலியல் குற்ற வழக்குகளின் விசாரணையை தேவையின்றி ஒத்தி வைக்கக் கூடாது என்று தலைமை பதிவாளர், நீதிமன்றங்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனைக்கு பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுவதோடு, விவசாயிகளின் வருவாயும் அதிகரிப்பதாக சேலம் மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் பயனாளிகள் 56 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் நாளை தொடங்கி வரும் சனிக்கிழமை வரை கன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி.ஆர். துரை - 28 Sec. )*

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பூர் மாவட்டம், வீரணம்பாளையத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்ட வீடுகளை மாநில அமைச்சர் திரு. தென்னரசு பயனாளிகளிடம் வழங்கினார்.

>>>>>>><<<<<<

கோவை மாவட்டம், ஆழியாறு பகுதியில் புலிகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

தென்காசி மாவட்டம், அடவிநயினார் அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட திருவானைக்காவல் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த கடைகளை அதிகாரிகள் இன்று அகற்றினர்.

>>>>>>><<<<<<

கோவை, குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம், காரக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் மத்திய அரசின் கள விளம்பரத்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை அருகே 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தியன் வங்கியின் சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் இன்று திறக்கப்பட்டது.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் ராகுல் சர்மா தங்கப்பதக்கம் வென்றார்.

செர்பியாவின் *Novi Sad*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மற்றொரு ஆடவர் 10 மீட்டர் பிரிவில் *Manish Narwal* வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<

காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் பாரா நீச்சல் பிரிவில் இந்தியாவின் *Kulkarni* மற்றும் *Suyash* இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் தகுதிச் சுற்று ஆட்டங்களில், *Kulkarni* நான்காவது இடத்தையும், *Suyash* ஆறாவது இடத்தையும் பிடித்தனர்.

ஆடவர் குண்டு எறிதலில் *Tajinderpal Singh Toor* மற்றும் *Samardeep* இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் குத்துச்சண்டை 51 கிலோ எடைப்பிரிவில் *Sakshi Choudhary*-யும், 70 கிலோ எடைப்பிரிவில் அருந்ததியும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் 200 மீட்டர் ஓட்டப்பிரிவில் *Animesh Kujur* அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>>><<<<<<

*Mifel* ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Niki Kaliyanda Poonacha* - ஈக்வெடாரின் *Gonzalo Escobar* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் ராஜீவ் ராம் – இங்கிலாந்தின் *Joe Salisbury* இணையை வென்றது.

>>>>>>><<<<<<

தைபே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Tanya Hemant* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 14-21, 21-16 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் *Wen Chi Hsu*-வை வென்றார்.

*இப்போட்டியின் இதர ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் Tarun Mannepalli, Kiran George, Devika Sihag ஆகியோரும் வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>><<<<<<*

*ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் Shubman Gill மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<*

*ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு போட்டிகளின் ஹாக்கி பிரிவில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Harmanpreet Singh தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*ஜப்பானில் இப்போட்டி செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் மாதம் 4 ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது. >>>>>>END<<<<<<*